THIRU K. VINAYAKAM : Sir, I object to this kind of insinuation against the Members of the Bench. I was once an Honorary Presidency Magistrate.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பதவிக்கு மரியாதை இல்லை என்ற வார்த்தையைச் சொல்ல வேண்டாம்.

திரு. கரு. சீமைச்சாமி : அவர்களுக்கு முக்கியத்துவம் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, இதை ஒழிக்க உத்தேசம் உண்டா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கௌரவ மாஜிஸ்ட்ரேட் பதவிகள் கௌரவத்திற்காகக் கொடுக்கப்பட்ட காலம் போய் விட்டது என்பது உண்மையே. ஆனால், இன்று அது தேவை என்று கருதப்படுகிறது. சாதாரண வழக்குகளை விசாரித்து நடத்த அது நீடிக்கப்படுகிறது. தேவை இல்லை என்று சொல்லக் கூடிய கருத்தும் இருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Sir, are the Government aware that the hon. Member. Thiru Cheemaichamy applied for the post of the Honorary Presidency Magistrate in the Madurai City.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி கேட்கும் நேரத்தில் மன்றத்திலே உறுப்பினர்கள் மீது குற்றச்சாட்டுகள் கூறக்கூடாது. எனவே, நான் இதை அனுமதிக்கவில்லை.

Probation Officers

* 40 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(a) whether the Government proposes to appoint more Probation Officers on the basis of the recommendation of the Inspector-General of Prisons; and

(b) if so, for what purpose ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) மாநிலச் சிறைத் துறைத் தலைவர் இது குறித்து அனுப்பியுள்ள செயற் குறிப்பு ஆய்வில் உள்ளது.

THIRU K. VINAYAKAM : Sir, may I know when the Government will take a proper decision on that Report?

THE. HON. THIRU S. MADHAVAN : The hon. Members may wait and see.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]